# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1992 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, உள்ளூர் திறைசேரி உண்டியல்கள் (திருத்தச்) சட்டம்

---

*[1992, ஆகஸ்ட் மாதம் 07 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

1992, ஓகஸ்ட் மாதம் 07 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 30 தபாற் செலவு : ரூபா 1.00

# 1992 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, உள்ளூர் திறைசேரி உண்டியல்கள் (திருத்தச்) சட்டம்

[1992, ஆகஸ்ட் மாதம் 07 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ. — ஓ. 10/92

## உள்ளூர் திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 1992 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, உள்ளூர் திறைசேரி உண்டியல்கள் (திருத்தச்) சட்டமென எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பிடு செய்யப்படும்) உள்ளூர் திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2)' ஆம் உட்பிரிவில் "பணச்சபையினால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட மத்திய வங்கியின் அலுவலர் ஒருவரினால்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "மத்திய வங்கியின் அலுவலர் ஒருவரினால் அல்லது மத்திய வங்கியின் பணச்சபையினால் அதற்கென எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட வேறு அலுவலர் எவரினாலும்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. 417 ஆம் அத்தியாயத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவு, "அத்தகைய திறைசேரி உண்டியல்கள் வழங்கப்படுமுன் நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர் நிர்ணயித்துத் தீர்மானிக்கின்றவாறு, ஆனால், வழங்கப்படும் தேதியிலிருந்து ஓராண்டுக்குப் பிந்தாமல்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அத்தகைய திறைசேரி உண்டியல்கள் வழங்கப்படுமுன் நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர் நிர்ணயித்துத் தீர்மானிக்கின்றவாறு" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்.

4. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையில் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமை இருக்கும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.